தார்கள். அண்ணாவின் நூல்கள் கொண்ட ஒரு நூலகத்தை அங்கே ஏற்படுத்துவதற்காக அண்ணா சதுக்கத்தின் ஒரு பகுதியில் ஒரு கட்டடம் கட்டப்படும் என்றார்கள். நோக்கத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், அந்தக் கட்டடம் கட்டும்போது அண்ணா சதுக்கத்தின் எழில் தோற்றம்—அங்கே உருவாக்கியிருக்கிற அமைப்பு சூழ்நிலையின் தன்மையோடு சேர்ந்துதான் உருவாகிறது. அந்தச் சூழ்நிலை அமைப்புகள்—ஆர்க்கிடெக்ச்சுவரல் ப்யூட்டி என்று சொல்லக்கூடிய ஒரு சிறப்பு இழந்து விடாதவாறு அரசு பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கம் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அதன் எழில், அதன் மதிப்பு குறையாமல் இந்த அரசு கவனித்துக் கொள்ளும். அதே நேரத்தில் பகலில் மக்கள் உள்ளே போக முடியவில்லை. அந்தச் சூடு தாங்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக அதற்குரிய அமைப்பை ஏற்படுத்த வசதி செய்வது என்பது அரசின் நோக்கம்.

திருநெல்வேலி மாவட்ட விதைப் பண்ணைத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண் 190—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு வித்துப் பண்ணைகளில் பணியாற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி கூலி வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட நிலை நீக்கப்பட்டு, கீழ்க்கண்ட தேதிகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விதைப் பண்ணைகளில் அரசு நிர்ணயித்தபடி குறைந்தபட்சக் கூலி வழங்கப்பட்டு வருகிறது:—

மேல் அகரம்.	கரையிறுப்பு.	கிள்ளிகுளம்.
13–7–1980.	2–12–1979.	27–6–1980.

(முற்பகல் 9–50)

திரு. ரா. கிருஷ்ணன் : சமீப காலத்தில் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு முன்பு பல்வேறு இயக்கங்கள் நடத்தப் பட்டு அதன் பேரில் ஜி.ஓ. போடப்பட்டு போட்ட நாளிலிருந்து குறைந்த பட்சக் கூலி கொடுக்க வேண்டியிருக்க பாக்கி வழங்கப் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித் தகவல் இல்லை. அரசாணை இட்ட நாளிலிருந்து வழங்கப்படவில்லை என்றால் விளக்கம் கேட்கப்பட்டு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஆண்–பெண் வித்தியாசம் இல்லாது சமநிலையில் மேற்படி கூலி கொடுக்கப்படுமா ? 240 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமா ? விவசாயி களுக்குத் தேவையான தொழிற் கருவிகள் வழங்கப்படுவதில்லை, அதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : : அரசாணை எதுவோ அதையொட்டி நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : விவசாயத் துறையின் கீழ் உள்ள அரசுப் பண்ணைகளில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர் களுக்கு அரசாங்கம் நிர்ணயித்த ஊதியம் தரப்படாததன் காரணமாகப் பல இடங்களில் போராட்டம் நடைபெற்று வருகிறது. நாம் நிர்ணயித்த கூலியை முன்னுதாரணமாக நாம் கொடுப்பதோடு அவர்களுடைய கோரிக்கைகளை நியாயமாக ஏற்று அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நியாயமான கோரிக்கை கள் எப்போதும் நிச்சயமாக ஏற்கப்படும்.

விவசாயத்துறைத் தலைவர் பதவி

*வினா எண் 191—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

விவசாயத்துறையில் அத்தொழில் வல்லுனரையே துணைத் தலைவராக நியமிக்க அரசு ஏதும் நடவடிக்கை மேற்கொண்டுள் ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.